**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு.R.பாண்டி மகாராஜா.,B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் புதன்கிழமை
**இ.ம.எண்.7/2025**
**in**
**அ.வ.எண்.203/2012**

1. கரூர் மாவட்டம், கரூர் வட்டம், என்.எஸ்.கிராமம், பாரதி நகர் க.எண்.39-ல் வசிக்கும் லேட்.நல்லசாமிகவுண்டர் மகன் சுமார் 75 வயதுள்ள துரைசாமி

2. திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் நகரம் க.எண்.79 மேற்கு கச்சேரி வீதியில் வசிக்கும் நல்லசாமிகவுண்டர் மகன் சுமார் 71 வயதுள்ள என்.ரங்கசாமி

3. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை நகரம் சங்கரன் லே அவுட்டில் வசிக்கும் நல்லசாமிகவுண்டர் மகன் சுமார் 68 வயதுள்ள என்.சின்னச்சாமி

ஆகியோர்களின் பொது அதிகார முகவர் கரூர் மாவட்டம், கரூர் வட்டம் என்.எஸ்.கிராமம் பாரதி நகர் க.எண்.39-ல் வசிக்கும் லேட்.நல்லசாமி கவுண்டர் மகன் சுமார் 75 வயதுள்ள துரைசாமி

...மனுதாரர்கள்/வாதிகள்

...எதிராக.....

1. திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சின்னமருதூர் கிராமம், வரப்பட்டியில் வசிக்கும் மாறப்பகவுண்டர் மகன் சுமார் 75 வயதுள்ள பழனிச்சாமிகவுண்டர் (இறப்பு)

2. திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சின்னமருதூர் கிராமம், வரப்பட்டியில் வசிக்கும் பழனிச்சாமிகவுண்டர் மகன் சுமார் 64 வயதுள்ள செல்லமுத்து

..... 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சின்னமருதூர் கிராமம், வரப்பட்டியில் வசிக்கும் செல்லமுத்து மகன் சுமார் 38 வயதுள்ள சரவணன்

4. திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சின்னமருதூர் கிராமம், வரப்பட்டியில் வசிக்கும் செல்லமுத்து மகன் சுமார் 35 வயதுள்ள கலையரசன்

...3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளாக
கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

இந்த மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17 மற்றும் 18–ன் படி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கல் நாள்:**– 24.03.2025

இம்மனுவானது 02.08.2025 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் திரு.K.பன்னீர்செல்வம்.,B.A.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.C.கருணாமூர்த்தி,B.Sc.,B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**"இறுதி உத்தரவு"**

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தால் பகுதியாக அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. அதனடிப்படையில், இந்த மனுவில் கோரியுள்ளவாறு சரவணன் மற்றும் கலையரசன் ஆகியோர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பது குறித்த திருத்தங்கள் மட்டும் அனுமதிக்கப்படுகிறது. இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு செலவுத் தொகை எதுவும் உத்தரவிடப்படவில்லை.

இன்று இந்த உத்தரவு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் நாள் என்னால் கையெழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

Sd/–திரு.R.பாண்டி மகாராஜா.,B.Sc.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.